# நிலைபேறான அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு மாகாண மட்டத்தை அடைவதற்கான வழிகாட்டல்கள்

SDCSL


**நிலைபேறான அபிவிருத்திச் சபை**

இல: 35, 02 ஆம் மாடி,

லேக்ஹவுஸ் கட்டடம்,

டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,

கொழும்பு 10.

## உள்ளடக்கம்


1. அறிமுகம் ........................................................................................ 3

2. விழிப்புணர்வு : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான 2030 நிகழ்ச்சி நிரல்.......................................................................... 4 - 8

3. மாகாண சபை பாடத்திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் வரைபடமாக்கல் ....................................................................... 9 - 11

4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை திட்டமிடுதலில் பிரதானப்படுத்துவதற்கான ..............................................................11 - 17

   4.1 முன்னுரிமை

   4.2 பங்குதாரர்களை இனங்காணுதல்

   4.3 இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை தயாரித்தல் மற்றும் மூலோபாய வரைபடங்களை மீளவடிவமைத்தல்

   4.4 நிலையான வளர்ச்சி இலக்குகளை திட்டமிடல் செயன்முறையுடன் ஒருங்கிணைத்தல்

   4.5 திட்டங்களுக்காக நிதியளித்தல் / வளங்களைப் ஈடுபடுத்தல்

   4.6 முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்

   4.7 மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல்

5. மேலதிக தகவல்களுக்காக பயன்படுத்தக்கூடிய வளங்கள் ................................ 17

இணைப்பு 1: மாகாண சபைகளுக்குப் பொருத்தமான நிலையான அபிவிருத்தி குறிகாட்டிகளை தயாரித்தல் ............................ 18 -21

## 1. அறிமுகம்

2015 ஆம் ஆண்டில் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி பற்றிய 2030 நிகழ்ச்சி நிரலை, ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடொன்றாக இருக்கும் இலங்கையும் ஏனைய 193 உறுப்பு நாடுகளுடன் இணைந்து இணக்கம் தெரிவித்துள்ளது.

சகல தரப்பினரினதும் இணைக்கப்பாட்டுடன் ஒட்டுமொத்த அரசின் (In the entire state) முழுமொத்த சமுதாயத்தின் (Society as a whole) அணுகுமுறையாக செயல்படுத்தப்பட வேண்டிய இந்த வளர்ச்சி, நிகழ்ச்சி நிரலின் மூலம் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வளர்ச்சியை அடைவதற்கு வழிகாட்டுகிறது. இதன் மூலம் எவரையேனும் தவறவிடாமல் இருக்கும் வண்ணம் அபிவிருத்தியினை திறந்து, அனைவரும் உள்ளடங்கலாக, 2030 ஆம் ஆண்டளவில் சமத்துவத்தன்மை மற்றும் ஒரு நிலையான உலகினை உருவாக்கும் இறுதி நோக்குடன், வறுமை, சமத்துவமின்மை, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீர்குலைவு என்பன உள்ளிட்ட உலகின் மிக அழுத்தமான சவால்களை எதிர்கொள்வதற்கான முழுமையான அணுகுமுறையினை இது ஏற்படுத்துகின்றது.

அதன்படி, 17 நோக்கங்களுடனும் 169 இலக்குகளுடனும் முன்வைக்கப்பட்ட இந்த உலகளாவிய நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதில் தேசிய மட்டத்திலும் பிராந்திய ரீதியிலும் தற்பொழுதுள்ள நிறுவனங்கள் அதற்கு இணைவாக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

இலங்கையினை ஒரு நிலையான அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்காக, தேசிய மட்டத்திலான அமைச்சுக்கள், அந்த அமைச்சுகளின் கீழுள்ள நிறுவனங்களில் திட்டமிடப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் சீரமைக்கப்படுவது அவசியமானதோடு, அதற்கு இணைந்த மாகாண மட்டத்தில் உள்ள அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் திட்டத்தினையும் இணைத்துக்கொள்வது உசிதமானதாகும்.

நிலைபெறுதகு அபிவிருத்திக்கான, உள்நாட்டு மற்றும் சர்வதேச பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கான வசதிகளை வழங்கல் மற்றும் அதற்கான சகல தரப்பினர்கள் மற்றும் ஒன்பது மாகாணசபைகளிலும் கேட்டறிந்து அவற்றின் இணக்கப்பாட்டுடன் நிலையான அபிவிருத்தி பற்றிய தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயத்தினை தயாரிப்பதற்கும் 2017 ஆம் ஆண்டின் இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள நிலைபெறுதகு அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, நிலைபேறான அபிவிருத்தி பற்றிய தேசியக் கொள்கை மற்றும் உத்திகளுக்கு இணங்க செயற்படுவது ஒவ்வொரு அமைச்சும், திணைக்களமும், மாகாண சபைகளும், மாகாண அமைச்சும், மாகாணத் திணைக்களங்களும் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களினதும் கடமைகளாகும்.

அதற்காக, நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மையமாகக் கொண்ட மாகாண அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதில் பரிசீலிக்கப்படக்கூடிய விடயங்களை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டியை இதன் மூலம் வழங்கப்படுகின்றது. முதலாவதாக, 2030 அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பற்றிய அறிமுகத்தினை தேசிய ரீதியில் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற

நிலைபேறான அபிவிருத்திச் சுட்டிகள் தொடர்பான குறித்த இலக்குகள் மற்றும் மாகாணங்களின் சிறப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு, மாகாண மட்டத்தில் இலக்குகளை நிர்ணயித்தல், அந்த இலக்குகளை அடைவதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து அதற்கான பொருத்தமான நிதியுதவியைப் பயன்படுத்துவதனூடாக திட்டத்தினை செயற்படுத்தி குறித்த கால இடைவெளியில் அவ் இலக்கினை அடைந்துகொள்ளும் முன்னேறத்தினை அளவிடுவதற்கும் மற்றும் அது பற்றிய சாதகமான நிலையினை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு இவ் வழிகாட்டிகள் உதவியாக அமையும். அத்துடன் பரிசீலனை செய்யக்கூடிய வளங்கள் பற்றியும் தகவல்கள் சேரிக்கப்படும்.

## 2. விழிப்புணர்வூட்டுதல் : நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்திற்கான 2030 நிகழ்ச்சி நிரல்

மாகாண மட்டத்தில், முக்கிய தரப்பினர்களிடையே நிலையான அபிவிருத்தி இலக்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், புரிதலை உருவாக்குவதற்கும், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளுடன் அவர்களை அறிமுகப்படுத்துவதற்கும், செயலமர்வுகள், பயிற்சி அமர்வுகள் மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இலங்கை உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகள் இணைந்து 17 நிலையான அபிவிருத்தி இலக்குகள், 169 இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான 248 குறிகாட்டிகளுடன் 2030 நிகழ்ச்சி நிரலை 2015 இல் வெளியிட்டன. அந்த இலக்குகள் பின்வருமாறு அமையப் பெற்றுள்ளது.. இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் அட்டவணை இந்த நீட்சி மூலம் அணுக முடியும். https://unstats.un.org/sdgs/metadata/

உலகளாவிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் ஒரு நாடாக இலங்கையின் பங்களிப்பு உலகளாவிய நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிச் சட்டகத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்படும். அதன்படி, ஒவ்வொரு மாகாணத்திற்கும் தயாரிக்கப்பட்ட மாகாண நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டித் தொகுப்பை உருவாக்கும்போது, அது உலகளாவிய குறிகாட்டிக் கட்டமைப்பிற்கு இணங்க உள்ளூர் மயமாக்கப்பட வேண்டும். 2022 யூலை 17 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படும் உலகளாவிய குறிகாட்டிக் கட்டமைப்பில் 231 பிற குறிகாட்டிகள் உள்ளன. மேலும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகளுக்கு பொருத்தமான குறிகாட்டிச் சட்டகத்தை உருவாக்குவது நல்லது.


### 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி

| | |
|---|---|
|   | எல்லா வகையான வறுமைகளையும் ஒழித்தல் |
|   | பசியை ஒழித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் நல்ல ஊட்டச்சத்தை அடைந்து, நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல் |


| | |
|---|---|
| 3 GOOD HEALTH AND WELL-BEING | ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்து அனைத்து வயதினருக்கும் நல்வாழ்வை ஊக்குவித்தல் |
| 4 QUALITY EDUCATION | அனைவருக்கும் முழுமையான, சமமான தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை வழங்குதல். |
| 5 GENDER EQUALITY | பாலின சமத்துவத்தை அடைவதன் மூலம் அனைத்து பெண்களையும் சிறுமிகளையும் வலுப் பெறச் செய்தல் |
| 6 CLEAN WATER AND SANITATION | அனைவருக்கும் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவற்றின் நிலையான நிர்வாகத்தை உறுதி செய்தல் |
| 7 AFFORDABLE AND CLEAN ENERGY | அனைவராலும் பெறக்கூடிய, நம்பகமான, நிலைபேறான மற்றும் புதுப்பிக்கப்பட்ட வலுச்சக்தி விநியோகத்தை உறுதி செய்தல் |
| 8 DECENT WORK AND ECONOMIC GROWTH | அனைவருக்குமான வளமான, சரியான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், முழுமையான உற்பத்தி மற்றும் சிறந்த வேலைவாய்ப்பினை மேம்படுத்தல் |
| 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | வலுவான உட்கட்டமைப்பை கட்டியெழுப்புதல், முழுமையான மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்து நவீனமயப்படுத்துவதற்கு ஊக்குவித்தல் |
| 10 REDUCED INEQUALITIES | நாடுகளுக்குள்ளேயும் மற்றும் அந் நாடுகளுக்கு இடையேயும் சமத்துவமின்மையை குறைத்தல். |
| 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES | நகரங்கள் மற்றும் முழுமையான குடியிருப்புக்களை, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலைபேறாக மாற்றுதல் |
| 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION | நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல் |

| | |
|---|---|
| 13 CLIMATE ACTION | காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளுக்கு எதிராக விரைவான நடவடிக்கை |
| 14 LIFE BELOW WATER | நிலையான அபிவிருத்திக்காக சமுத்திரங்கள், கடல்கள் மற்றும் சமுத்திர வளங்களின் பாதுகாப்பு மற்றும் சிக்கனமான பயன்பாடு |
| 15 LIFE ON LAND | புவியியல் சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலைபேறான பயன்பாடு, நிலையான வன முகாமைத்துவம், பாலைவனமாக்கலுக்கு எதிரான நடவடிக்கை, மீட்டெடுத்து பாதுகாத்து மேம்படுத்தல், நிலச் சீரழிவு நிறுத்துதல் மற்றும் புனர்வாழ்வு மற்றும் அங்கிகளின் வேறுபாட்டு அழிவை நிறுத்துதல் |
| 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS | நிலைபேறான வளர்ச்சிக்காக, அமைதியான மற்றும் பூரணமான சமூகங்களை உருவாக்குதல், அனைவருக்கும் நீதிக்கான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புணர்வுடன் முழுமை பெற்ற நிறுவனங்களை உருவாக்குதல். |
| 17 PARTNERSHIPS FOR THE GOALS | நிலையான அபிவிருத்திக்கான உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் |

2030 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினை உலகிற்கு அறிமுகப்படுத்தும் செயன்முறையானது நீண்ட பயணத்தின் விளைவாகும். 1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஸ்டொக்ஹோம் மாநாட்டிலிருந்து, உலகத் தலைவர்கள் இணைந்து எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் நடாத்தப்பட்ட மாநாடு மற்றும் அவற்றின் முடிவுகளை சுமாராக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




இந்த 17 நிலையான அபிவிருத்தி இலக்குகள், 03 முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டவை. இது சுற்றுச்சூழல் (Environmental), பொருளாதார (Economic) மற்றும் சமூக (Social) வரம்புகளை உள்ளடக்கியது. ஒரு நாடு அல்லது ஒரு பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி சுற்றுச்சூழல் நட்பு, பொருளாதார ரீதியாக சாத்தியமான மற்றும் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதே இதன் கருத்து. சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் முக்கோணத்துடன் ஒத்துப்போகும் ஒரு சமநிலையான வளர்ச்சியை அடைய முடியும்.




வளர்ச்சிச் செயன்முறை என்பது பொருளாதார நன்மைகள் அல்லது சமூக நன்மைகள் அல்லது சுற்றுச்சூழல் நன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே செய்யப்படுகிறது. மூலோபாய ரீதியில், இந்த 03 தூண்களுக்கும் பயனுள்ள வகையில் மேம்பாட்டு நடவடிக்கைகளை இது ஊக்குவிக்கிறது.

மேலும், இந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை 05 பொதுவான பரிமாணங்களாக (5 Ps) பிரிக்கலாம். மனிதர்கள் (People), கிரகம் (Planet), சமாதானம்(Peace), செழிப்பு (Prosperity) மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் முக்கியத்துவம் வாய்ந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இந்த பரிமாணங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.




**1. மனிதர்கள்:**

பூமியில் வாழும் மக்களின் வறுமையையும், பசியையும் ஒழித்து, மரியாதையுடனும், சமத்துவத்துடனும் வாழ்வதை உறுதி செய்தல்.

**2. கிரகம்:**

நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி, இயற்கை வளங்களை நிலையான முறையில் முகாமைத்துவம் செய்தல், காலநிலை மாற்றம் தொடர்பான அவசர நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பூமியை சீரழிவிலிருந்து பாதுகாத்தல்.

**3. சமாதானம்:**

அச்சம் மற்றும் வன்முறை இல்லாத, அமைதியான, நீதியான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளித்தல்.

**4. செழிப்பு:**

பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு இணங்க ஒரு வளமான மற்றும் திருப்திகரமான வாழ்க்கையை வாழ்தல்.

**5. கூட்டாண்மை:**

வலுவான, புத்துயிர் பெற்ற, இயற்கையின் அடிப்படையில் உலகளாவிய ஒத்துழைப்புக்கான கூட்டாண்மையைக் கட்டியெழுப்புதல்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சில முக்கியமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை ஆகும். அதாவது, நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல், பின்வரும் அடிப்படைக் காரணங்களால் ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளிலிருந்து (MDGs) வேறுபடுகின்றது.

- உலகளாவிய (Universality)
- முழுமையான அணுகு முறை (Inclusive)
- யாருக்கும் பாதிப்பிலாத வளர்ச்சி (Leave no one behind)
- சம்பந்தப்பட்டவர்கள் பங்கேற்பது (Multi-stakeholder Partnerships)
- ஒருங்கிணைப்பு (Integration)
- மாற்றும் திறன் (Transformative)
- உள்ளூர் மயமாக்கல் (Localization)

17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஒருவருக்கொருவர் பின்னிப் பிணைந்தவை என்பதோடு, மேலும் ஒரு இலக்கை அடைவதற்கான நடவடிக்கைகள் ஏனைய இலக்குகளைப் பாதிக்கின்றன.

அத்துடன் மேலும், ஒரு நிறுவனத்தின் செயற்பாடு பல நோக்கங்களை அடைய உதவும், மேலும் ஒரு நோக்கத்தை அடைய பல நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரங்களும் உள்ளன. உதாரணமாக, நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பாக, நிலையான அபிவிருத்தி இலக்குக்கான இலக்கம் 06 இல், 08 இலக்குகள் இருப்பதோடு, அதற்கான செயற்படும் 43 நிறுவனங்கள் உள்ளன. எனவே, மாகாணத்தில் உள்ள நிறுவனங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் உள்ள ஒவ்வொரு துறையிலும் உள்ளீடுகளை வழங்கும் பங்குதாரர்களை அடையாளம் கண்டு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

## 3. மாகாண விடயங்களுக்கான மீளாய்வு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை வரைபடமாக்குதல்

நிலையான அபிவிருத்தி இலக்குகளை ஒருங்கிணைக்கக் கூடிய துறைகளை அடையாளம் காண்பதற்காக பொருத்தமான மாகாண சபை பாடகங்கள் தொடர்பாக மீளாய்வு செய்தல் மற்றும் வரைபடமாக்குவது உகந்ததாகும்.

அதற்கேற்ப, மாகாண அரசாங்க சேவைகளை வழங்கும் செயன்முறையினுள் உள்ளே ஒருங்கிணைந்த மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பட்டியலின் படி, மாகாண சபைகளின் விடயங்கள், நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணங்க, பின்வருமாறு வரைபடமாக்கப்படலாம்.

| **மாகாண சபையின் விடயம்** | **நிலையான அபிவிருத்தி இலக்குகள்** |
| --- | --- |
| ▪ சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு | 1 NO POVERTY |
| ▪ விவசாயம், விவசாயத் தொழிநுட்ப விரிவாக்கம், மாகாண நலன்கள் மற்றும் விவசாயச் சேவைகள் ஊக்குவிப்பு மற்றும் கல்வி (மாகாணங்களுக்கு இடையிலான நீர்ப்பாசனம் மற்றும் நிலச் சீரமைப்பு உத்தேசத் திட்டங்கள், அரசாங்கக் காணிகள் மற்றும் பெருந்தோட்ட விவசாயம் தவிர்ந்த) சிறிய நீர்ப்பாசன நடடிவக்கைகளை மீளமைத்தல் மற்றும் பராமரித்தல், தேசிய விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் எனப் பெயரிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள்<br>▪ நீர்ப்பாசனம்: நீர்ப்பாசன நடவடிக்கைகளைத் திட்டமிடல், வடிவமைப்புச் செய்தல், நடைமுறைப் படுத்தல், மேற்பார்வை மற்றும் பராமரிப்பு செய்தல்.<br>▪ மாகாணத்தினுள் உணவு வழங்கல் மற்றும் வினியோகம் செய்தல்.<br>▪ விலங்கு வேளாண்மை<br>▪ கடற்றொழில் கைத்தொழில் | 2 ZERO HUNGER |
| ▪ பாதுகாப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள்<br>▪ அனாதைகள் மற்றும் குடும்பங்களின் மறுவாழ்வு<br>▪ உடல் ரீதியாக, மன ரீதியாக மற்றும் சமூக ரீதியாக ஊனமுற்றோரின் மறுவாழ்வு மற்றும் நலன்கள்<br>▪ பொது மருத்துவமனைகள், கிராமிய மருத்துவமனைகள், மகப்பேற்று இல்லங்கள், பொதுச் சுகாதார சேவைகள், சுகாதாரக் கல்வி, பேசாக்கு, குடும்பநல சுகாதாரம், தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு, உணவு மற்றும் உணவு | 3 GOOD HEALTH AND WELL-BEING |

| | |
|---|---|
| சுகாதாரம், சுற்றுச்சூழல் சுகாதாரத்தை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்<br>▪ உள்ளூர் மருத்துவம்<br>▪ ஆயுர்வேத மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளை நிறுவுதல், அத்தகைய மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு நன்கொடைகளை வழங்குதல் மற்றும் கிளைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்<br>▪ உள்ளூராட்சி மன்ற சேவைகள் | |
| ▪ கல்வி மற்றும் கல்வி சார் சேவைகள்<br>▪ உள்ளூராட்சி சேவைகள் | 4 QUALITY EDUCATION |
| ▪ சிறுவர் மற்றும் பெண்கள் நடவடிக்கைகள் அபிவிருத்தி<br>▪ சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு<br>▪ கிராமிய அபிவிருத்தி | 5 GENDER EQUALITY |
| ▪ நீர்ப்பாசனம் - ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களில் ஓடும் ஆறுகள் தொடர்பான உத்தேச நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கு இடையிலான நீர்ப்பாசனம் மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து நீர்ப்பாசன நடவடிக்கைகளையும் திட்டமிடுதல், உருவாக்குதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் பராமரித்தல்<br>▪ உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகள் | 6 CLEAN WATER AND SANITATION |
| ▪ மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உள்ளூர் பணித்தளங்கள் (தளங்கள்) மற்றும் வழங்கப்பட்ட வசதிகளை அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் (நீர் - மின்சாரம் மற்றும் தேசிய மின்சார அமைப்பை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்ட மின்சாரம் தவிர) | 7 AFFORDABLE AND CLEAN ENERGY |
| ▪ பொருளாதாரத் திட்டமிடல்<br>▪ மாகாணத்திற்குள் சாலைப் பயணிகள் போக்குவரத்து சேவைகள் மற்றும் மோட்டார் வாகனங்களின் மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான சாலைப் போக்குவரத்து சேவைகளை ஏற்பாடு செய்தல்<br>▪ மாகாண சுற்றுலாத்துறை வளர்ச்சி<br>▪ ஒருங்கிணைக்கப்படாத வர்த்தகம், இலக்கியம், விஞ்ஞான ரீதியான, மத மற்றும் பிற சமூகங்கள் மற்றும் சங்கங்களின் ஒழுங்குமுறை | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH |
| | |

| | |
|---|---|
| ▪ மாகாணப் பாதைகள், பாலஙகள், படகு சேவைகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்<br>▪ மாகாணத்தினுள் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட எந்தவொரு சட்டத்தினாலும் அல்லது அதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அளவிற்கு சுரங்க மற்றும் கனிம வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல்<br>▪ கூட்டுறவு, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் மாகாணத்தினுள் உள்ள கூட்டுறவு சங்கங்களை ஏற்பாடு செய்தல், பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கணக்காய்வு செய்தல் | 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE |
| ▪ கிராமிய அபிவிருத்தி<br>▪ கூட்டுறவு, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் மாகாணத்தினுள் உள்ள கூட்டுறவு சங்கங்களை ஏற்பாடு செய்தல், பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கணக்காய்வு செய்தல் | 10 REDUCED INEQUALITIES |
| ▪ உள்ளூராட்சி மன்றங்கள்<br>▪ வீடுகள் மற்றும் நிர்மாணம்<br>▪ விளையாட்டினை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்<br>▪ சினிமாக்கள் மற்றும் நாடகங்கள், இசை, திரையரங்குகள், பொழுதுபோக்குகள் | 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES |
| ▪ கூட்டுறவு, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் மாகாணத்தினுள் உள்ள கூட்டுறவு சங்கங்களை ஏற்பாடு செய்தல், பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கணக்காய்வு செய்தல்<br>▪ கூட்டுறவு கல்வி மற்றும் விளம்பரம் உட்பட மாகாணத்தினுள் கூட்டுறவினை விருத்தி செய்தல் | 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION |
| ▪ மாகாணத்தினுள் சுற்றாடலைப் பாதுகாத்தல்<br>▪ காணி, அதாவது காணியினது அல்லது அதற்கு மேற்பட்ட உரிமை, காணி உரிமையினை மாற்றல் மற்றும் காணி கையகப்படுத்தல், காணிப் பயன்பாடு, நிலம் சரிசெய்தல் மற்றும் காணியினை மேம்படுத்தல். | 13 CLIMATE ACTION |
| ▪ நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர் வாழ் உயிரினங்களை அபிவிருத்தி செய்தல் | 14 LIFE BELOW WATER |
| ▪ காணி, அதாவது காணியினது அல்லது அதற்கு மேற்பட்ட உரிமை, காணி உரிமையினை மாற்றல் மற்றும் காணி கையகப்படுத்தல், காணிப் பயன்பாடு, நிலம் சரிசெய்தல் மற்றும் காணியினை மேம்படுத்தல். | 15 LIFE ON LAND |

| | |
|---|---|
| ▪ பொது மக்கள் சமாதானம் | 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS |
| ▪ பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான உள்ளூர் கூட்டாண்மை | 17 PARTNERSHIPS FOR THE GOALS |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை திட்டமிடலுக்கு மாற்றியமைக்கும் செயன்முறை

### 4.1. முன்னுரிமை

தற்போதைய வளங்கள், வாய்ப்புகள், பலவீனங்கள் மற்றும் பின்னடைவுகளை உணர்ந்து, நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயல்படுத்துவதற்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பது மாகாண அரசாங்கத் துறையினுள் உகந்ததாகும். இங்கு மாகாணத்தில் குறிப்பிட்ட சமூக-பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார மற்றும் தேசிய அளவிலான காரணிகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான தேசிய அளவிலான தரவுத் தளம் தற்போது நிலையான அபிவிருத்தி சபையினால் பராமரிக்கப்படுகின்றதோடு, இதில் 80 இற்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. (https://data.sdg.lk/) இதற்கு மேலதிகமாக, குடித்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பு தரவு மாகாண மட்டத்திலிருந்து பெறப்பட்டு, ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் மற்றும் பலவீனங்களை பகுப்பாய்வு செய்து அடையாளம் காணப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட மற்றும் முன்னுரிமைப் பகுதிகளை அடையாளம் காண்பதற்கான தேவைப்பாடு ஒன்றினை மதிப்பீடு (Need Assessment) செய்யப்படல் வேண்டும். இந்தச் செயல்பாட்டில், பின்வருவனவற்றில் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்,

- ❖ மாகாணத்தின் தனித்துவமான அம்சங்கள்
- ❖ வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- ❖ இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை சேகரிக்கும் திறன்
- ❖ அதிகபட்ச தரவு நீட்டிப்பு தடையின்றி மற்றும் ஒருங்கிணைந்த அணுகலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய திறமை (வேகமான சுய மதிப்பீட்டிற்கான தரவு கணக்கெடுப்புகள், மக்கள் தொகை கணக்கெடுப்புகள், நிர்வாக பதிவுகள், புவியியல் படங்கள் அல்லது பிற வகையான வெளிப்படையான தரவுகள் உட்பட தற்போதுள்ள தேசிய மற்றும் சர்வதேச உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களிலிருந்து மட்டுமே பெறப்படல் வேண்டும்.)

மிக முக்கியமாக இருப்பது தரவுகளின் பல்வேறு ஆதாரங்களை அடையாளம் கண்டு மற்றும் அந்தத் தரவைக் காண்பிக்க ஒரு தரவு தளமொன்றை (Data Platform) உருவாக்குவது ஆகும். அத்தகைய தரவுத் தளத்தில் இற்றைப்படுத்தப்பட்ட தரவை தொடர்ந்து உள்ளீடு செய்வது அவசியமாவதோடு, தற்போதுள்ள தரவை பகுப்பாய்வு செய்து, தரமான (Qualitative) மற்றும் அளவு (Quantitative) பகுப்பாய்வுகளைச் செய்து, இடஞ்சார்ந்த (Spatial) மற்றும் இடஞ்சாராத (Non-Spatial) முடிவுகளை உருவாக்குவதன் மூலம், மாகாணத்தில் எந்தத் துறைகள், எந்த பகுதிகள், எந்த மட்டத்தில், எந்த கால இடைவெளியில், எந்த வழியில், யாரும் தவிர்க்க முடியாத வகையில் நிலைபேறான முறையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்பதை மூலோபாய பங்குதாரர்களுடன் அடையாளம் காணச் சிறந்த வழிகளாகும்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஒருவருக்கொருவர் இணைந்துள்ளன. ஒரு இலக்கை அடையும் போது, அது தொடர்பான மற்றும் பாதிக்கப்படாத ஏனைய இலக்குகளையும் அடைய முடியும். அவ்வாறே அந்த அனைத்து நோக்கங்களின் பயன்களை உரிமையாக்கிக் கொள்ளவும் முடியும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட துறையில் விரைவான முன்னேற்றத்தை அடைவதற்கு, மிகவும் பின்தங்கிய பகுதிகளை அடையாளம் காண்பது மற்றும் அந்த பகுதிகளில் உள்ள வளங்கள், பெறப்பட்ட தகவல்கள் மற்றும் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் பற்றிய பரந்த விழிப்புணர்வைப் பெறுவது அவசியம்.

உதாரணமாக, இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளின்படி, ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, தமது மாகாணத்தில் வறுமைச் விகிதம் சுமார் 60% ஆக இருக்கும்போது, வேலையின்மைச் சதவீதம் 5% ஆக இருக்கும்போது, குடிநீர் விநியோகத்தினை உள்ளடக்கிய பகுதிகளின் சதவீதம் சுமார் 25% ஆக இருக்கும்போது, உற்பத்திப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு சுமார் 10% ஆக இருக்கும்போது, அப்பகுதிகளில் அதிக கவனம் செலுத்துவதோடு, பல்வேறு அம்சங்களில் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச் சூழல் அம்சங்களில் ஏற்படும் முன்னுரிமைகளை அடையாளம் காணப்படல் வேண்டும்.

## 4.2. பங்குதாரர்களை அடையாளம் காணுதல்

மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளில் பல்வேறு துறைகளில் ஒவ்வொரு பங்குதாரரின் பங்களிப்பையும் பங்கேற்பையும் பெறுவது அபிவிருத்தி பணிகளை எளிதாக்குகிறது. எனவே, மாகாணத்தில் உள்ள அரசாங்க நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், நன்கொடைகள் மற்றும் மானியங்களை வழங்கும் நிறுவனங்கள், தனியார் துறை, ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்கள் மற்றும் சமூகங்கள் உள்ளிட்ட பங்குதாரர்களின் பங்கேற்பை வரைபடமாக்குவது (Stakeholder Mapping) முக்கியமானதாகும். மிகவும் முக்கியமாவது, மாகாண மட்டத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நெறிப்படுத்தல், தரவுகளைப் பதிவு செய்தல், திட்டங்களை ஏற்பாடு செய்தல், வளங்களைப் பயன்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் போன்ற ஒவ்வொரு கட்டத்திலும் பங்குதாரர்களின் பங்களிப்பைப் பெறுவதுமாகும்.

இதுபோன்ற பன்முக செயன்முறைக்கு பல்வேறு பங்குதாரர்களின் பங்கேற்பு அவசியமானதாகும்.


| பிரிவு | நிறுவனம் |
|---|---|
| மத்திய அரசு மற்றும் அதன் கீழ் செயல்படுகின்ற பிரதேச நிறுவனங்கள் | தேசிய திட்டமிடல் திணைக்களம், அமைச்சுக்கள், நிதி ஆணைக் குழு, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் |
| மாகாண சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் | மாகாண அமைச்சுகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாகாண திணைக்களங்கள், அதிகாரசபைகள், பணியகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்ற அனைத்து தொடர்புடைய நிறுவனங்களும் |
| சிவில் சமூக அமைப்புகள் | அரச சார்பற்ற அமைப்புகள், தொண்டர் நிறுவனங்கள், பழங்குடி மக்களின் அமைப்புகள், நம்பிக்கை அடிப்படையிலான அமைப்புகள், சமூக இயக்கங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகள், சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் |
| வியாபாரச் சமூகம் | வணிகத் தலைவர்கள், வர்த்தக மற்றும் தொழில்துறை சபைகள், கூட்டுறவு மற்றும் தொழிற்சங்கங்கள், பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் |
| கல்வி நிறுவனங்கள் | பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், ஆராய்ச்சி மத்திய நிலையங்கள், தேசிய மற்றும் மாகாண கல்வி நிறுவனங்கள் |
| அபிவிருத்திப் பங்காளிகள் | இருதரப்பு மற்றும் பலதரப்பு நன்கொடையாளர்கள், ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்கள், பிராந்திய அபிவிருத்தி மற்றும் மத்திய வங்கிகள், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள். |

பங்கேற்பாளர்களின் பங்கேற்பு அலைவரிசைக்கேற்ப (Partnership Spectrum) மூன்று சூழல்களின் கீழ் அவர்களது பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது,

i. பங்குதாரர்களிடையே இருக்கும் வளங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சிறந்த முடிவுகளை அடைய ஒரு சூழலை உருவாக்குதல்.

ii. பாரம்பரிய வளர்ச்சி செயல்முறைகளை மிகவும் பயனுள்ளதாகவும், திறமையாகவும் மாற்றுவதற்கு, பல்வேறு பங்குதாரர்கள் ஒன்றிணைந்து, வளங்களை ஒரே குறிக்கோளில் சேகரிக்கின்றனர்.

iii. பலவிதமான பங்குதாரர்கள் இணைந்து பணியாற்றுவதன் மூலம், ஒவ்வொரு பங்குதாரரும் தனித்தனியாகச் செயல்படுவதன் மூலம் அடைய முடியாத ஒரு மாற்றத்திற்கான வளங்களை ஒதுக்குதல்.

<table>
<tr>
<td>பங்குதாரர்களிடையே இருக்கும் வளங்களை பகிர்ந்து கொள்ளுதல்</td>
<td>1 பாரம்பரிய விருத்திச் செயன்முறைகளை மேலும் சிறந்த முறையில் மேற்கொள்ளல்</td>
<td>2 பரிணாம வளர்ச்சி</td>
</tr>
<tr>
<td colspan="3">
</td>
</tr>
<tr>
<td>ஒவ்வொரு பங்குதாரருக்கும் பயனளிக்கும் நோக்கத்துடன் பங்குதாரர்கள் தங்கள் வசம் உள்ள அனைத்து வகையான வளங்களையும் பரிமாறிக் கொள்கிறார்கள். இது அவர்களுக்கு அதிக வளங்களை வழங்குவதற்கான திறனை வழங்குகிறது அல்லது சிறந்த விநியோகத்தை வழங்குகிறது<br><br>உதாரணம்:- ஒரு அரச சார்பற்ற நிறுவனம் ஒரு திட்டத்திற்காக ஒரு நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெறும்போது, ஒரு நிறுவனம் ஒரு நற்பெயரைப் பெறுகிறது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வது போன்ற வளப் பரிமாற்றங்கள் மூலம் சிறந்த திட்டங்களை உருவாக்க</td>
<td>பாரம்பரிய மேம்பாட்டு செயல்முறையின் விளைவு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதிக உற்பத்தித்திறன், திறன் மற்றும் புதுமை அல்லது பெரிய அளவிலான பல பங்குதாரர்களை வழங்குவதாகும், இதனால் பங்குதாரர்கள் தங்கள் பகுதிகளின் கூட்டுத்தொகையை விட அதிகமாக இருக்க முடியும்.<br><br>உதாரணம்:- பல்வேறு அமைப்புகள் ஒரு ஆலோசனை பிரச்சாரத்தைச் சுற்றி ஒன்றிணைந்து, மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய விமர்சன வெகுஜனத்தை உருவாக்குதல்</td>
<td>பல விதமான பங்குதாரர்கள் ஒருங்கிணைந்த ஆதாரங்களை ஒன்றாக இணைத்து, ஒவ்வொரு பங்குதாரரும் தனித்தனியாக செயல்படுவதன் மூலம் அடைய முடியாத ஒரு அமைப்பு மாற்றத்தை வழங்குவதற்கான கருவிகளை உருவாக்குகிறார்கள்.<br><br>உதாரணம்:- வினியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் பிரதான கொள்வனவாளர்கள் உணவுச் சங்கிலியில் இணைந்து, உயிரியல்பொருள் சார்ந்த, அதிக சத்துள்ள பயிர்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றனர்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| அறிவைப் பெற்றுக் கொள்ளுதல். | | |

(மூலம் : SDG Partnership Strategy , 2023)

உதாரணம்-:

நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்கம் 04 : அனைவருக்கும் தரமான கல்வி

ஏதேனும் ஒரு மாகாணத்தில் 16 மற்றும் 17 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் சதவீதம் 25 முதல் 30 சதவீதம் வரை இரண்டாம் நிலைக் கல்வியை முடிக்கும் போது, அந்த மாகாணத்தில் உள்ள குழந்தைகளின் சனத்தொகையில் 3/4 பேர் இரண்டாம் நிலைக் கல்வியைப் பெறவில்லை என்று தெரிகிறது. ஆனால், நிலையான அபிவிருத்தி இலக்கு 04 இன் படி, 2030 இற்குள் 100% தரமான கல்வியை அடைவதற்கான உந்துதல் இருக்க வேண்டும்.

அத்தகைய சூழ்நிலையில் இதற்கான பங்கேற்பாளரான அரசாங்கம், வணிக சமூகம், கல்வியாளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவை கல்வித் துறையில் உள்ள இந்த இடைவெளியைப் பற்றி கவனம் செலுத்துவதோடு, பங்குதாரர்களின் யோசனைகள் மற்றும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி இந்த நிலையைக் குறைக்க ஒரு மூலோபாயத் திட்டத்தை உருவாக்குவது உகந்ததாகும்.

இருக்கின்ற இடைவெளியைக் குறைப்பதற்கு, குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு அதிக அணுகலை வழங்குதல், தரமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பாடசாலைகளில் கிடைக்கும் வசதிகளை மேம்படுத்துதல், தொலைதூர கற்றல் வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், நிகழ்நிலையினூடாக புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைகளையும் சேர்ப்பது போன்ற தொழில்நுட்ப மற்றும் நிதி மூலங்களைக் கொண்ட பங்குதாரர்களின் வரைபடத்தை உருவாக்குவது மிகவும் பொருத்தமான முறையாகும்.

## 4.3.இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை தயாரித்தல் மற்றும் மூலோபாய வரைபடத்தை மீள வடிவமைத்தல்

அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு, உலகளாவிய இலக்கு மற்றும் குறிகாட்டியினை மாகாணத்திற்கு ஏற்றவாறு தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதோடு இதற்காக மாகாணத் திட்டங்களில் இருக்கின்ற இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை மீளாய்வு செய்தல் மற்றும் தற்போது தேசிய அளவில் தயாரிக்கப்பட்ட இலக்குகளின் பட்டியலைப் பயன்படுத்தி தேவையான திருத்தங்களைச் செய்தல், குறிப்பிட்ட இலக்குகளை அடையாளம் காணவும் மற்றும் மாகாண மட்டத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றத்தை அளவிடக்கூடிய குறிகாட்டியினை விருத்தி செய்வது உசிதமானதாகும். இதுவரை தேசிய மட்டத்தில் தயாரிக்கப்பட்ட இலக்குகளின் பட்டியல் மற்றும் தரவுகளை இந்த நீட்டிப்பு மூலம் அணுகலாம். (https://sdc.gov.lk/sites/default/files/202306/Status%20Update%20of%20SDG%20Indicators_June%202023.pdf)

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள், குறிப்பிட்டதாகவும் (Specific), அளவிடக்கூடியதாகவும் (Measurable), அடையக்கூடியதாகவும் (Achievable), பொருத்தமானதாகவும் (Relevant), காலம் வரையறுக்கப்பட்டதாகவும் (Time-Bound) இருத்தல் வேண்டும். மேலும் அந்த இலக்குகளை அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு நிலையான அபிவிருத்தி இலக்குக்கும் தேசிய அளவிலான நிலையான குறியீடுகளை எவ்வாறு சீரமைக்க முடியும் என்பதை அட்டவணை 1 காட்டுகிறது.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக மாகாண அரசாங்க சேவைகளை வழங்குவது தொடர்பான தற்போதைய கொள்கைகள், உத்திகள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மீள திட்டமிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். அதற்காக பின்வரும் கருவியை அங்கு பயன்படுத்தலாம்.

- ❖ நீண்டகால மாற்றத்திற்காக நீண்ட காலத் திட்டமிடற் செயன்முறை ஒன்று அவசியமாகும்.
- ❖ கடந்த கால அனுபவ பகுப்பாய்வு (Back casting), சிறந்த அனுபவங்களின் பரிமாற்றத்தில் அடிப்படையில் விரும்பிய எதிர்கால வாய்ப்புகளை அடையக்கூடிய உத்திகளை திட்டமிடுவது நிகழ்காலத்திலிருந்து எதிர்காலம் மற்றும் பின்தங்கிய நிலையில் இருந்து பகுப்பாய்வு செய்தல் வேண்டும்..
- ❖ இங்கு, நீண்ட கால மற்றும் போதியளவிலான நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட இடைநிலை செயற்பாடுகளுடன் அபிவிருத்தி முன்னேற்றம் எவ்வாறு இணைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு சிக்கலான தீர்வுச் சட்டகமொன்றை கட்டியெழுப்புவது உகந்ததாக அமையும். இது எதிர்பார்க்கப்பட்ட முடிவினது முன்னறிவிப்பினை கணிப்பதுடன் தொடங்குவதோடு, முடிவை அடைய என்ன தேவை என்பதைப் புரிந்துகொள்ள ஒரு பின்தொடர்தல் செய்யப்படல் வேண்டும். (மனித, நிதி, சட்டம் போன்ற காரணிகள்).

## 4.4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறையினை ஒருங்கிணைத்தல்

மாகாணத்தின் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை பகுதிகளுக்கான திட்டமிடலைத் தயாரிக்கும் போது மாகாணத் திட்டமிடல், நிலையான அபிவிருத்தி இலக்குகள், நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளுடன் கருத்தில் கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும்

மூலோபாய திட்டமிடல், வரவு செலவுத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயல்முறைகளில் இணைப்பதன் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை உள்ளீடு செய்வதன் மூலம் இதனைச் செய்யலாம். எடுத்துக்காட்டாக, அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைவதற்காக மாகாணத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த இலக்குகளை தாக்கல் செய்வது, அந்த ஐந்தாண்டு திட்டத்தின் படி வருடாந்திர திட்டங்கள் / நிறுவன செயல் திட்டங்களைத் தயாரிப்பது அவசியம். (நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் வழிகாட்டுதல்கள் / சுற்றறிக்கைகள் / படிவங்களுக்கு ஏற்ப இடம்பெறுதல் வேண்டும்). இங்கு மிகவும் முக்கியமாக, குறிப்பிட்ட காலச் சட்டகத்தினுள் அந்த இலக்குகள் எவ்விதம் அடையப் பெற்றுள்ளன என்பது பற்றி நிலையான குறிகாட்டிகளை அடையாளம் கண்டுகொள்வதாகும்.

## 4.5. திட்டங்களுக்காக நிதி / வளங்களின் பயன்பாடு

திட்டமிடலினுள் அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளுக்கான தேவை மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு நிதி உத்தியொன்றைத் தயாரிப்பது அவசியமாகும். இங்கு மாகாணங்களிடம் உள்ள வருமானம் மற்றும் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டைத் தவிர வேறு நிதி மூலங்களை அடையாளம் காண்பது மிகவும் பொருத்தமான முறையாகும்.


அதாவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி நிதியுதவி நிறுவனங்கள், தனியார் துறை சமூக பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் நட்புத் திட்டங்களுக்காக (Corporate Social Responsibility and ESG) ஒதுக்கப்பட்ட நிதி மூலங்களை அடையாளம் கண்டு, பிராந்தியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளில் மாகாணத் திட்டமிடல் மூலம் நிதியளிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதன் மூலம், வளங்கள் வீண்விரயமாவதை குறைப்பதுடன், கவனம் செலுத்தப்படாத பகுதிகளில் ஏற்பாடுகளைச் செயல்படுத்தவும், வளங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் முடியும்.

மேலும், திட்டங்களை செயல்படுத்துவதில் நிதி வளங்கள் மட்டுமல்ல, தொழில்நுட்ப வளங்கள் மற்றும் மனித வளங்களும் ஏனைய தரப்பினர்களிடமிருந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுத்தல் அவசியமாகும்.

மாகாணங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் நிதி ஆணைக்குழுவினால் பின்வருமாறு சீரமைக்கப்படலாம்.

| **நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புடைய துறைகள்** | **ரூ. மில்லியன்** |
|---|---|
| பாலினச் சமத்துவம் | - |
| காலநிலை மாற்றம் | - |
| சமாதானமான, நியாயமான மற்றும் வலுவான நிறுவனங்கள் | - |
| உலகளாவிய ஒத்துழைப்பு | - |
| தொழிற்சாலை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு | 5352 |
| சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்பு | 4117 |
| சமத்துவமின்மையைக் குறைத்தல் | 3030 |
| சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் | 1404 |
| பசியை ஒழித்தல் | 1226 |
| நிலைபேறான நகரங்கள் மற்றும் குடியிருப்புகள் | 1157 |
| சிறந்த வேலைவாய்ப்புகள் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தல் | 1078 |
| பொறுப்புள்ள நுகர்வு மற்றும் உற்பத்தி | 862 |
| புவியயல் சுற்றுச் சூழல் முறைமை மற்றும் பல்லுயிர் (புவி மீதான வாழ்க்கை) | 762 |
| வறுமை ஒழிப்பு | 323 |
| கடல் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல் (நீர் வாழ் உயிரினங்கள்) | 214 |
| தாங்கக் கூடிய மற்றும் சுத்தமான வலுசக்தி | 198 |

(மூலம் : Voluntary Sub-national Review, 2022)




(மூலம் : Voluntary Sub-national Review, 2022)

### 4.6. முன்னேற்றத்தை கண்காணித்தல் மற்றும் அறிக்கை செய்தல்

முறையான செயற்பாட்டின்படி தயாரிக்கப்பட்ட திட்டத்தின் செயல்பாட்டின் முன்னேற்றத்தை அளவிடுவதில் இலக்காகக் கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான ஆரம்ப முன்னேற்றத்தை பதிவதற்கு மேலதிகமாக, பெறுபேறுகள் (Result) மற்றும் தாக்கத்தை (Impact) கண்காணிப்பதற்கான ஒரு முறையையும் உருவாக்குவதன் மூலம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு பங்களிப்புகளை பதிவு செய்வது எளிதானது.

மேலும், SDG Budget Tagging & Coding முறையின் ஊடாக தாக்கல் செய்யக்கூடிய தரவைப் பயன்படுத்தி ஒவ்வொரு நிலையான அபிவிருத்தி இலக்குக்கும் ஒதுக்கப்படும் நிதி அளவுகளை அடையாளம் காண பகுப்பாய்வு செய்யலாம். இதன்படி எந்த நோக்கத்திற்காக குறைவாக செலவிடப்பட்டது என்பது போன்ற மற்றும் குறைந்த செலவீனங்களை அடையாளம் கண்டு, எதிர்வரும் வருடத்தில் திட்டங்களை வகுக்கும் போது உள்ளடக்கப்படாத பகுதிகளுக்கு ஒதுக்கீடுகளை ஒதுக்கி நிலைபேறான அபிவிருத்திக்கான அணுகு முறையினை தரமான முறையில் மேற்கொள்ள முடியுமாக இருக்கும்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக தகவல்களை சேகரிக்கும் முக்கியமான மூன்று செயன்முறைகளைச் சார்ந்துள்ளது.

- கண்காணிப்புக்காக பயன்படுத்தக் கூடிய வலுவான மாகாண நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகளின் தொகுப்பை உருவாக்குதல்.
- புள்ளி விபரத் திறனை வலுப்படுத்துதல் மற்றும் தரவுகளை இற்றைப்படுத்தல்.
- தரவு சேகரிப்புக்காக நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிய தரவு மூலங்களை பயன்படுத்தல்

பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் தொடர்ச்சியான கண்காணிப்புக்காக ஏற்றதாகவும், பெறுபேறுகளை மையமாகக் கொண்டதாகவும், அறிவியல் அடிப்படையிலான முன்னோக்குடன் வலுவான தரவுத் தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட குறிகாட்டியாக இருத்தல் வேண்டும். அத்துடன், அத் தரவுகள் பல்வேறு வகைளிலான தரவுத் தொகுதிகளை உள்ளடக்கிய (வயது, பாலினம், வருமான நிலை, மத பன்முகத்தன்மை, இனப் பன்முகத்தன்மை, புவியியல் மற்றும் பிராந்திய வேறுபாடுகள், விளிம்பு சமூக குழுக்கள் போன்றவை)போன்ற குறிப்பீடம் விதமாக தரவு மூலாதாரங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படல் வேண்டும். அத்துடன் எல்லைக் காரணிகள் மற்றும் சிக்கலான சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான பிற குறிகாட்டிகளையும் அடையாளம் காண முடியும்.

### 4.7. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான மதிப்பீடு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மாகாண மட்டத்தில் செயல்படும் விதத்தினைப் புரிந்து கொள்வதற்கும் மற்றும் அபிவிருத்தி செயற்திறனை மேம்படுத்துவதற்காக மதிப்பீடு தேவைப்படுகின்றது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் பொருத்தத்தையும், திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறையின் பயன்கள், செயல்திறன், தாக்கம் மற்றும் நிலைத்த தன்மையை தீர்மானிப்பதற்கு உதவுகின்றது.

## 5. மேலதிக தகவல்களை பரிசீலிப்பதற்காக பயன்படுத்தக் கூடிய வளங்கள்

தேசிய கொள்கைகளுக்கு மற்றும் மாகாண முன்னுரிமைகளுக்கு ஏற்ப நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை கருத்தில் கொண்டு, நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய கால மாகாண அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரிக்கும் செயல்முறையில் கூட ஏனைய அபிவிருத்திப் பணிகளில் பயன்படுத்தக்கூடிய, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு பொருத்தமானதாக தயாரிக்கப்பட்டுள்ள பின்வரும் வளங்களை அணுகுவதன் மூலம் மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

I. SDC Website (www.sdc.gov.lk)

நிலையான அபிவிருத்தி சபையினை நடாத்திச் செல்கின்ற இந்த இணையத் தளம் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டல்கள் பற்றியும் பரிசீலிப்பதற்காக முக்கியமான புத்தகங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

II. SDG Data Portal (https://data.sdg.lk/)

நிலைபேறான அபிவிருத்திச் சபையினால் நடாத்திச் செல்கின்ற தேசியத் தரவுத் தளத்தில் இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்ட குறிகாட்டிகளின் தரவுகளை உள்ளடக்கியுள்ளதோடு அது அடிக்கடி இற்றைப்படுத்தப்படுகின்றது.

III. National SDG Progress Dashboard (https://data.unescap.org/data-analysis/country-sdg-profiles)
தேசிய அளவில் இனங் காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களின் தற்போதைய முன்னேற்றத்தைப் பற்றி பயனர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் வழங்கப்பட்டுள்ளதோடு, இந்தத் தகவல்கள் மாகாண மட்டத்தில் இலக்குகளை அடையாளம் காணவும் பயன்படுத்தப்படலாம்.

IV. SDG Budget Tagging & Coding Classification Table (https://sdc.gov.lk/en/resources)
திட்டங்களில் உத்தேச செயற்பாடுகள் எந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குக்காக பங்களிக்கும் என்பதை அடையாளம் காண்பதற்காக வடிவமைக்கப்பட்ட வகைப்படுத்தல் அட்டவணை அதற்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும்.

V. SDG Investor Map (https://sdginvestorplatform.undp.org/country/sri-lanka) தனியார் துறை முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம், நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்களுக்கு கூடுதலான பங்களிப்பை வழங்குகின்ற நிலையன எரிசக்தி, சுகாதாரம், நுகர்வோர் பொருட்கள், உணவு மற்றும் பான வகைகள், உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய 5 துறைகளில் அடையாளம் காணப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை உள்ளடக்கிய ஒரு வரைபடம் ஒன்றைத் தயாரித்துள்ளதோடு அதன் மூலம் முதலீட்டுத் துறையினை இனங் காண முடியும்.

## இலக்கு 01 : மாகாண சபைகளுக்குப் பொருத்தமான நிலையான அபிவிருத்தி குறிகாட்டிகளைத் தயாரித்தல்.

நிலையான அபிவிருத்திக்கான பூகோள குறிகாட்டிச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகளின் அடிப்படையில், மாகாண சபைகளுக்கான தனித்துவத் தன்மையுள்ள குறிகாட்டிக் கட்டமைப்பத் தயாரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன்படி கருத்திற்கொள்ளக் கூடிய சில குறிகாட்டிகளின் பகுதியொன்று பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| இலக்குகள் | குறிகாட்டிகள் |
|---|---|
| இலக்கு 01 | சர்வதேச வறுமைக் கோடு |
| | தேசிய வறுமைக் கோடு |
| | சமூகப் பாதுகாப்பு |
| | அடிப்படை வசதிகளுக்கான அணுகல் |
| | பேரழிவுகளை எதிர்கொள்ளும் திறன் |
| | ஏழைகளுக்காக வளங்களை ஒதுக்குதல் |

| | |
|---|---|
| | வறுமையை ஒழிப்பதற்கான கொள்கைகள் |
| இலக்கு 02 | ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் உணவுப் பாதுகாப்பு |
| | போசனைக் குறைபாடு |
| | சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்கள் |
| | உணவுப் பாதுகாப்பின்மை அளவுகோள் |
| | விவசாயத்திற்கான மரபணு வளங்கள் |
| | விவசாயத்திற்கான முதலீடுகள் |
| | விவசாய ஏற்றுமதி மானியங்கள் |
| | உணவு விலை ஏற்ற இறக்கங்கள் |
| □□□□□□ 03 | தாய் இறப்பு வீதம் |
| | குழந்தை இறப்பு வீதம் |
| | தொற்று நோய் பரவல் |
| | தொற்றா நோய்கள் மற்றும் உள ஆரோக்கியம் |
| | போதைப் பொருள் பாவனை |
| | புதிய யுவதிகளுக்கு இடையே இளம் பருவ விகிதம் |
| | வீதி விபத்துக்கள் |
| | பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் |
| | உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு |
| | சுற்றுச் சூழல் மாசுபடுதல் காரணமாக சுகாதாரப் பாதிப்பு |
| | புகையிலைப் பயன்பாட்டுக் கட்டுப்பாடு |
| | சுகாதார ஆராய்ச்சி |
| | சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு |
| | சுகாதார இடர் முகாமைத்துவம் |
| □□□□□□ 04 | பயனுள்ள கற்றல் முடிவுகள் |
| | முன் பருவக் குழந்தை விருத்தி |
| | தொழில் மற்றும் தொழிற் கல்வி |
| | வேலைக்கான திறமைகள் |
| | கல்விக்கு சமமான பிரவேசம் |
| | வயது வந்தோருக்கான எழுத்தறிவு |
| | தகவல் தொழில் நுட்பத் திறன் |
| | போதியளவான கல்வி விருத்தி |
| | கல்வி வசதிகள் |
| | புலமைப் பரிசிலுக்கான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி |
| | தகுதி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| □□□□□□ 05 | பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு ஏற்படும் மாற்றம் |
| | பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் |
| | குறைந்த வயதுத் திருமணங்கள் |
| | சம்பளம் இல்லாமத மனையியல் சார்ந்த வேலைகளை வழங்குதல் |
| | தலைமைத்துவத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் |
| | இனப்பெருக்க சுகாதாரப் பிரவேசம் மற்றும் உரிமைகள் |
| | சமமான பொருளாதார உரிமைகள் |
| | பெண்கள் வலுவூட்டலுக்கான தொழில் நுட்பம் |
| | பாலினச் சமூகம் பற்றிய கொள்கைகள் |
| □□□□□□ 06 | பாதுகாப்பான குடிநீர் |
| | சுகாதாரம் மற்றும் சுகாதார வசதிகளுக்கான பிரவேசம் |
| | நீரின் தரம் |
| | தண்ணீரை திறம்படப் பயன்படுத்தல் |
| | எல்லை கடந்த நீர் ஒத்துழைப்பு |
| | நீர் சார்ந்த சுற்றுச் சூழல் முறைமை |
| | நீர் மற்றும் சுகாதார வசதிகள் பற்றிய சர்வதேச உறவுகள் |
| | பங்கேற்பு முகாமைத்துவம் (தண்ணீர் மற்றும் சுகாதாரம்) |
| □□□□□□ 07 | வலுச் சக்திக்கான பிரவேசம் |

| | |
|---|---|
| | வலுச் சக்திப் பகிர்வு |
| | வலுச் சக்தி வினைத்திறன் |
| | வலுச் சக்திக்கான சர்வதேச உறவுகள் |
| | வலுச் சக்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடுகள் |
| □□□□□□ 08 | மொத்த தேசிய பொருளாதார அபிவிருத்தி |
| | பொருளாதாரப் பயன்பாடு மற்றும் புத்தாக்கம் |
| | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை முறைமைப்படுத்தல் |
| | மூலப் பொருட்களின் வளங்களின் செயற்திறன் |
| | வேலை செய்தல் மற்றும் சிறிய வேலைகள் |
| | வேலை, கல்வி, பயிற்சி ஆகியவற்றில் இல்லாத இளைஞர் சமுதாயம் |
| | சிறுவர் தொழிலாளர்கள் |
| | தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பான பணிச் சூழல் |
| | நிலைபேறான சுற்றுலாத் துறை |
| | நிதிச் சேவைகளுக்கான பிரவேசம் |
| | வர்த்தகத்திற்கான உதவி |
| | இளைஞர் வேலைவாய்ப்பு உத்திகள் |
| | நிதிச் சேவைகளுக்கான பிரவேசம் |
| □□□□□□ 09 | உட்கட்டமைப்பு வசதிகளுக்கான விருத்தி |
| | இணைந்த நிலையான தொழில் மயமாக்கல் |
| | சிறிய அளவிலான தொழில்களுக்கான நிதிப் பிரவேசம் |
| | பெறுமதி சேர்க்கப்பட்ட ஒரு அலகிற்கான காபனீரொட்சைடு வெளியேற்றத்தின் அளவு |
| | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி |
| | தாங்கக் கூடிய திறமை இருக்க வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் |
| | மனையியல் தொழிநுட்ப விருத்தி |
| | இணையம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்கான பிரவேசம் |
| □□□□□□ 10 | வருமான விருத்தி |
| | ஒருங்கிணைப்பு (சமூக, பொருளாதார, அரசியல்) |
| | பாகுபாட்டை ஒழித்தல் |
| | நிதி மற்றும் சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் |
| | நிதிச் சந்தை வாய்ப்பு ஒழுங்கு முறைகள் |
| | உலகளாவிய கட்டுப்பாடுகள் |
| | பாதுகாப்பான நகர்வுகள் மற்றும் இயக்கங்கள் |
| | விசேடமாக மற்றும் வித்தியாசமான முறையில் கவனித்தல் |
| | வளர்ச்சிக்காக வளங்களை ஒதுக்குதல் |
| | நிதி மற்றும் சமூகப் பாதுகாப்பு நோய் எதிர்ப்புச் சக்தி |
| | ஒளிபரப்புச் செலவு |
| □□□□□□ 11 | வீட்டு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் |
| | பொதுப் போக்குவரத்து முறைமைகள் |
| | நிலையான நகர மயமாக்கல் |
| | கலாச்சார மற்றும் இயற்கை மரபுரிமைகள் |
| | பேரழிவுகளை எதிர்கொள்ளும் திறன் |
| | நகர்ப்புறக் காற்றின் தரம் மற்றும் கழிவு முகாமைத்துவம் |
| | நகர்ப்புற பசுமை மற்றும் பொது இடங்கள் |
| | நகர்ப்புற திட்டமிடல் |
| | இடர் முகாமைத்துவக் கொள்கைகள் |
| | நிலையான மற்றும் நெகிழ்திறன் கொண்ட கட்டிடங்கள் |
| □□□□□□ 12 | நிலையான நுகர்வு மற்றுமு் உற்பத்திக்கான திட்டங்கள் |
| | இயற்கை வளங்களின் நிலையான பயன்பாடு |
| | உணவு கழிவு மற்றும் வீண் விரயம் |
| | இரசாயனப் பொருட்கள் மற்றும் கழிவு முகாமைத்துவம் |

| | |
|---|---|
| | கழிவு உற்பத்திகளைக் குறைத்தல் |
| | நிலையான பயன்பாடுகளுக்கான கூட்டுறவு |
| | நிலையான அரச பெறுகைப் பயன்பாடுகள் |
| | நிலையான வாழ்க்கை முறை பற்றிய விழிப்புணர்வு |
| | நிலையான அபிவிருத்திகான ஆராய்ச்சி மற்றும் திறன் விருத்தி |
| | நிலையான சுற்றுலாத் துறையைக் கண்காணித்தல் |
| | புதைபடிவ எரிபொருள் மானியங்கள் |
| □□□□□□ 13 | மீள் மற்றும் தகவமைப்புத் திறன் |
| | காலநிலை மாற்றம் பற்றிய கொள்கை |
| | காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு |
| | காலைநிலை மாற்றம் பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் கட்டமைப்புக்கு இணக்கம் (UNFCCC) |
| | காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் |
| □□□□□□ 14 | கடல் மாசுறல் |
| | கடல் மற்றும் கடலோர உயிரியல் சூழல் முறைமை |
| | கடல் அமிலமயமாதல் |
| | நிலையான மீன்பிடித் தொழில் |
| | கடலோரப் பகுதிகளைப் பாதுகாத்தல் |
| | கடற்றொழில் மானியம் |
| | சிறிய தீவாகவுள் நாடுகளுக்கு மற்றும் குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கான கடல் வளங்கள் |
| | ஆராய்ச்சித் திறன் மற்றும் கடல் தொழில் நுட்பம் |
| | சிறிய அளவிலான பாரம்பரிய மீன்பிடித் தொழில் |
| | ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டம் தொடர்பான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல் (UNCLOS) |
| □□□□□□ 15 | நிலம் மற்றும் நன்னீர்ச் சுற்றுச் சூழல் அமைப்புக்கள் |
| | நிலையான வன முகாமைத்துவம் |
| | பாலைவனமாதல் மற்றும் நிலச் சீரழிவு |
| | மலை நாட்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு |
| | அங்கிகளின் பல்வகைமை சிதைவு |
| | மரபணு வளங்களின் பயன்பாடு |
| | விலங்குகள் மற்றும் தாவர இனங்களை வேட்டையாடுவதைத் தடுத்தல் |
| | ஆக்கிரமிக்கும் உயிரினங்களை அழித்தல் |
| | தேசிய மற்றும் தேசிய திட்டமிடலில் பல்லுயிர் பெருக்கத்தை இணைத்தல் |
| | அங்கிகளின் பல்வகைமை மற்றும் சுற்றுச் சூழல் முறைமைக்காக வளங்களைப் பயன்படுத்தல் |
| | வன முகாமைத்துவத்தில் வளங்களைப் பயன்படுத்தல் |
| | உலகளாவிய ரீதியில் இடம்பெறுகின்ற வனவிலங்குகளை வேட்டையாடுதலைத் தடுத்தல். |
| □□□□□□ 16 | வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய இறப்புகளைக் குறைத்தல் |
| | மானிட உடல் |
| | அனைவருக்கும் நீதி |
| | சட்டவிரோத நிதிப் பயன்பாடு |
| | இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் |
| | வினைத்திறன் கூடிய நிறுவனங்கள் |
| | ஒருங்கிணைந்ததான முடிவுகளை எடுத்தல் |
| | ஒருங்கிணைந்ததான உலக ஆட்சி |
| | சட்ட ரீதியான அடையாளம் |
| | தகவலுக்காக பொது மக்கள் பிரவேசம் |
| | வன்முறையைத் தடுப்பதற்கான திறன் அபிவிருத்தி |
| | பாகுபாடு இல்லாத சட்டங்கள் |
| □□□□□□ 17 | வரி மற்றும் ஏனைய வருமானங்களை வசூலித்தல் |

| | |
|---|---|
| | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக்கான ஒப்பந்தங்கள் |
| | மேலதிக நிதி மூலங்கள் |
| | கடன் சீரமைப்பு |
| | முதலீடுகளை ஊக்குவித்தல் |
| | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சர்வதேச ஒத்துழைப்பு |
| | தொழில்நுட்ப பரிமாற்றம் |
| | தகவல் தொழில்நுட்பத்திற்கான திறன் மேம்பாடு |
| | நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான திறன் விருத்தி |
| | பல்தரப்பு வர்த்தக அமைப்புகள் |
| | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதி |
| | சுங்கவரியற்ற சந்தைப் பிரவேசம் |
| | உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மை |
| | நிலைபேறான அபிவிருத்திகான கொள்கை ஒழுங்கிணைப்புகள் |
| | நான் கொள்கைக்கு மதிப்பளித்தல் |
| | நிலைபேறான அபிவிருத்திகான சர்வதேச ஒத்துழைப்பு |
| | கூட்டாண்மைகள் (பொது, தனியார் மற்றும் சிவில் அமைப்புக்கள்) |
| | தேசிய தரவு முறைமையினை நடாத்துதல் |
| | தரவுக் கொள்ளளவுகளின் வளர்ச்சி |